**செ. கு. எண்**:09 **நாள்**:08.01.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 8.1.2013

இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் உழவர்கள் நன்றி செலுத்தும் நாளான தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளினை தங்கள் சொந்த மண்ணில் உற்றார் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கொண்டாடுவதை தமிழக மக்கள் வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த உழவர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் தங்கள் சொந்த மண்ணில் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், அவர்கள் எவ்வித அல்லலுமின்றி சவுகரியமாக தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வர ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்புப் பேருந்துகளை இயக்கவும், சிறப்பு வசதிகளை செய்து தரவும் நான் உத்தரவிட்டுள்ளேன். இதன்படி,

1. சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் மாநிலத்தின் முக்கிய ஊர்களுக்கு **11.1.2013** அன்று **1,280** சிறப்பு பேருந்துகளும், **12.1.2013** அன்று **1,315** சிறப்பு பேருந்துகளும், **13.1.2013** அன்று **312** சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படும்.
2. **14.1.2013** அன்று பயணிகளின் தேவைக்கேற்ப சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.
3. இதே போன்று சென்னையைத் தவிர்த்து மாநிலம் முழுவதிலும் இருந்து, **11.1.2013** அன்று **730** சிறப்பு பேருந்துகளும், **12.1.2012** அன்று **745** சிறப்பு பேருந்துகளும், **13.1.2013** அன்று **1,230** சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படும்.
4. மொத்தத்தில் **11.1.2012** முதல் **13.1.2012** வரை **5,612** சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.
5. மேலும், நான்கு நாட்கள் நடைபெறும் பொங்கல் பண்டிகையினை உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கோலாகலமாக கொண்டாடிவிட்டு ஊர் திரும்பிட வசதியாக, இதே அளவிலான பேருந்துகளை **16.1.2013** முதல் **20.1.2013** வரை இயக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.
6. பொங்கல் பண்டிகையையொட்டி **300** கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இயக்கப்படும் சிறப்புப் பேருந்துகளுக்கு இணையதள பயணச்சீட்டு முன்பதிவு முறையின் அடிப்படையில் (Online Ticket Reservation System), பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.
7. இது தவிர, கணினி மூலம் உடனடி தள முன்பதிவு செய்யும் வகையில், சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் **16** சிறப்பு முன்பதிவு மையங்கள் அமைக்கப்படும்.
8. சென்னை மற்றும் புறநகர் மக்கள் சுற்றுலாப் பொருட்காட்சி, அண்ணா சதுக்கம், காந்தி மண்டபம், வி.ஜி.பி., முட்டுக்காடு, கோவளம், எம்.ஜி.எம்., மாமல்லபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, கிஷ்கிந்தா, குயின்ஸ் லாண்டு போன்ற பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு சென்று வர ஏதுவாக, **14.1.2013** முதல் **16.1.2013** வரை சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் **250** சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

9. பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு தனியார் பேருந்துகள் அதிகக் கட்டணம் வசூலித்தால், அது குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்க ஏதுவாக, சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலுள்ள அரசு விரைவு போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் **24794709** என்ற தொலைபேசி எண் அமைக்கப்படும். பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் மக்கள் நல நடவடிக்கைகள், தமிழக மக்கள் அனைவரும் தங்கள் சொந்த ஊர்களில் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையினை சீரோடும், சிறப்போடும் கொண்டாட வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**